**தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 219 – விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 20 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,799.81 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 2310.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 489.65 மில்லியன் அதாவது 17.49 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 586.51 | 534.90 | 51.61 | 8.80 |
| மூலதனம் | 2,213.30 | 1,775.26 | 438.04 | 19.79 |
| **மொத்தம்** | **2,799.81** | **2,310.16** | **489.65** | **17.49** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

அமைச்சிற்குரிய 21901 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9.40 | 9.03 | 5.70 | 8.00 | 33.00 | 26.71 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0301/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.97 மில்லியனாக இருந்தது.

## 2.4 வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0015/0100/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 194.39 மில்லியன் ஆக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த

முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தால் 21901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த இணக்கக் கூற்றுக்கள் 2016 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சீ.சீ.10 பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் ஏனைய பதிவேடுகளும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (v) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (vi) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 |
| (vii) | சீ.சீ.10 பதிவேடு, கடன்பட்டோர் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 90 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை |

### 3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 செலவின விடயங்களின் கீழ் விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு ரூபா 145,070,468 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தினால் அதற்காக ரூபா 122,987,503 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்களுக்குரிய செயற்திட்டம் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே செயற்திட்ட அமுலாக்கல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 கட்டுநிதிக் கணக்குகள்**

திணைக்களத்தால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் ரூபா 981,414 தொகையான கட்டுநிதி மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 20,000 கூட்டுத்தொகையான மீதி 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டிருந்தது.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 58,437,363 கூட்டுத்தொகையான 85 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய வைப்புத் தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டியிருந்த போதிலும், ரூபா 194,389,992 தொகையான வைப்பு மீதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரையாண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 40 மில்லியன் ஒப்பந்த வைப்புகளுக்குரிய நிறுவனங்களின் பெயர் மாத்திரம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 569(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

21901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறாள இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,812,020 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 58,450 தொகை மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 1,700 தொகையுமாக ரூபா 60,150 கூட்டுத்தொகையான கடன் மீதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி பட்டோலையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட வேண்டிய மீதி ரூபா 119,543 அதிகரித்தும், ரூபா 444,127 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக

கணக்குகளின் மீதி தேறியதாக ரூபா 324,584 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டிற்குரியதாகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மற்றும் விளைவுகள், வருடாந்த கட்டுநிதி தேவையினை திட்டமிடல், வருடாந்த பெறுகைகள் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ரூபா 2,799.81 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் திணைக்களத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மாதம்பை சேனாநாயக்க கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 33 மில்லியன் தொகையான நீச்சல் தடாகம் மற்றும் வத்தேகம மடுல்கெலே விளையாட்டுச் சங்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட ரூபா 0.9 மில்லியன் தொகையான டெனிஸ் மைதானம் என்பன முறையே 04 வருடங்கள் மற்றும் 01 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 13 மாவட்ட அலுவலகங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2017 யூன் 20 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று அந்த ஆண்டிலிருந்து முறையான பிரகாரம் கையளிக்கப்படாமல் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

விளையாட்டுத்துறை அமைச்சிற்குச் சொந்தமான 03 மோட்டார் வாகனங்கள் முறையான வகையில் கையளிக்கப்படாமல் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலமாக திணைக்களத்தால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

## 3.9 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) சட்டரீதியான ஏற்பாடுகள்** | |
| (i) 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுத்துறை (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 21அ(2) ஆம் பிரிவு | சகல சங்கங்களினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள், அதற்கு பிந்திய ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர், பொதுக்கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே கணக்காய்விற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும், 08 தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 26.32 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 2013 சனவரி 15 ஆந் திகதிய 1793/3 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கத்தின் கட்டளை இல. 42 | ஏதாவது தேசிய சங்கமொன்றின் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் அல்லது குழுவின் அங்கத்தவரொருவர் உள்ளபடியான பதவி முடிவடையும் திகதி முதல் பதினான்கு நாட்களுக்கு தமது பொறுப்பிலுள்ள தேசிய சங்கத்திற்குரிய ஆதனங்கள், வேறு உத்தியோகத்தரொருவருக்கு அல்லது குழு அங்கத்தவரொருவருக்கு அல்லது விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பதவி முடிவடைந்த உத்தியோகத்தர்கள் மற்றும் குழு அங்கத்தவர்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | |
|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்திற்குச் சொந்தமான குழூம் வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன குறித்த காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.10 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காமை**

2014 ஆம் ஆண்டில் ரூபா 9,442,647 தொகையான 09 செயற்திட்டங்களும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 41,445,161 தொகையான 20 செயற்திட்டங்களுமாக ரூபா 50,887,808 கூட்டுத்தொகையான 29 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 9,442,647 தொகையான 10 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு ரூபா 10,660,715 பெறுமதியான காசோலை வரையப்பட்டு 13 மாதகாலம் கையில் வைத்திருந்த பின்னர் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 35,540,161 தொகையான 17 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்காமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைவிடத்தின் பிரகாரம் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் வினைத்திறனற்றது என காரணம் காண்பிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,938,000 கிரயமான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) காணி போதியளவில் இல்லாமை மற்றும் நிலத்தின் எல்லை தொடர்பாக பிரச்சினையான நிலைமையொன்று காணப்படுவதாகக் குறிப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 3,967,000 கிரயமான 02 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 9,939,715 கிரயமான ஹாவாஎலிய பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 80,000 செலவிடப்பட்டிருந்தது. நுவரெலியா மாநகரசபை, செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இணங்காமையின் காரணமாக அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,738 மில்லியன் பெறுமதியான 27 செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 19 மாதங்கள் முதல் 57 மாதங்கள் வரையிலான காலவீச்சில் தாமதிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

**3.11 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயலாற்றல் அறிக்கை தயாரித்தல்**

செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாதிருந்தமையால் இலக்குகளுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த அதற்குப் புறம்பான செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 யூலை 06 ஆந் திகதிய 2011/14 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் மாவட்ட விளையாட்டுத் தொகுதியொன்று 50 மீற்றர் நீளமான நீச்சல் தடாகத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. அதற்கு முரணாக 14 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளில், 25 மீற்றர் நீளமான நீச்சல் தடாகங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**3.12 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் அவ்வாறு சீராக்கப்பட வேண்டிய கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சீராக்கம் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | |
| | | ரூபா | ரூபா | |
| (i) | தேறாத வைப்புக்கள் | - | 20,910 | 20,910 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 10,790,819 | 9,587,644 | 20,378,463 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 472,517 | 21,858,944 | 22,331,461 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 53,395 | 802,754 | 856,149 |

**3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் செயல் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் செயல் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ‘‘சக்தி வர்தன’’ நிலையத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பொருட்கள் மற்றும் ஆலோசனையற்ற சேவைகளுக்காக திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் எல்லை ரூபா 10 மில்லியனாக இருந்த போதிலும், அதற்கு முரணாக ரூபா 23.64 மில்லியன் தொகையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தின் பெறுகைகள் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. உரிய கேள்வி ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்னார் மாவட்ட விளையாட்டுத் தொகுதியை நிர்மாணித்தல்

மன்னார் மாவட்ட விளையாட்டுத் தொகுதி செயற்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள நீச்சல் தடாகம், உள்ளக விளையாட்டரங்கு, பார்வையாளர் கூடம் மற்றும் 400 மீற்றர் ஓட்டப் பாதை போன்றவற்றை நிர்மாணிப்பதற்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 204.81 மில்லியனாகும். இந்த ஒவ்வொரு நிர்மாண செயற்திட்டத்திற்காகவும் வெவ்வேறாக கேள்வி கோரி 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த 03 ஒப்பந்தங்களுக்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 45.96 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1 வழிகாட்டியின் பிரகாரம் செயற்திட்டத்தை இடையூறு இன்றி அமுல்படுத்தவதற்குத் தேவையான செயற்பாடுகள் பெறுகை நிறுவனத்தால் முறையாக அமுல்படுத்த வேண்டிய மட்டத்தில் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி செல்லுபடிக் காலத்தின் போது ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்காக 90 நாள் காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அக்காலம் 68 நாட்களினால் விஞ்சி 158 நாட்கள் அளவிலான காலத்தை எடுத்திருந்தது.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.5.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அமைச்சின் பெறுகைகள் குழுவிற்குரிய ஒப்பந்தம் கேள்விதாரருக்கு கையளிப்பதற்கு முன்னர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்ததன் பின்னர், தகுதியான கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டமைக்கும், அவருக்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்குள்ள விருப்பம் ஒரு வாரத்திற்குள் ஏனைய கேள்விதாரர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்தது. இந்த அறிவித்தல் வழங்கியதன் பின்னர் அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்திற்கு எதிராக ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பான ஏனைய கேள்விதாரர்களின் பிரதிநிதித்துவம் காணப்படுமாயின் அவற்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்க வேண்டியிருந்தது. மேற்கூறப்பட்ட ஒப்பந்த கையளிக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வியின் செல்லுபடிக் காலம் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட உடன் ஏற்றுக்கொள்ளல் கடிதம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய ஒப்பந்தத்தைக் கையளிக்கும் போது 111 நாட்கள் தாமதித்து ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

(v) 2011 யூலை 06 ஆந் திகதிய 2011/14 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் மன்னார் மாவட்ட விளையாட்டுத் தொகுதி செயற்திட்டம் கணக்காய்வுத் திகதியான 2016 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாமையினால் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 3.14 முகாமைத்துவ நலிவுகள்

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளையாட்டுச் சங்கங்களின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் செயலாற்றல் மற்றும் நிதி ஏற்பாடுகளை வழங்க வேண்டிய துறைகளை குறிப்பாக இனங்காணாமல் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 88.48 மில்லியன் விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2013 சனவரி 15 ஆந் திகதிய 1793/3 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட 2013 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கத்தின் கட்டளையின் 35 ஆவது பிரிவின் பிரகாரம் அமைச்சிலிருந்து

மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் ஏதாவது தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் தயாரிக்கப்படுகின்ற வருடாந்த பாதீட்டில் உரிய மானியங்கள் மற்றும் அதற்குரிய பயன்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்ற பகுப்பாய்வு ரீதியான மதிப்பீட்டின்றி நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 08 விளையாட்டுச் சங்கங்களினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த சங்கங்களுக்கு ரூபா 68.66 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட நிதிஏற்பாடு முறையான பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருந்தா என உறுதிப்படுத்துவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 மே 16 ஆந் திகதிய 1758/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 35 ஆவது பந்தியின் பிரகாரம் விளையாட்டு அபிவிருத்திற்காக அனுசரணை வழங்கிய தனியார் நிறுவனத்திற்காக வரிச் சலுகை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், விளையாட்டுச் சங்கங்களுக்காக அனுசரணை வழங்கும் தனியார் பிரிவைப் பெற்றுக் கொள்வதற்காக எந்த வேலைத் திட்டமும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் விளையாட்டுச் சங்கங்களின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளில் இருந்து மாத்திரம் நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுத் தொகுதி நிர்மாணம்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த 36 செயற்திட்டங்களை அமுல்படுத்தவதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 78.87 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அந்த செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகளின் ஒரு நோக்கமான உரிய கால வேளையில் தரத்துடன் கூடிய வேலைகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தால் அதற்கு முன்னர் கையளிக்கப்பட்ட ஒப்பந்தமொன்று வழுக்களுடன் தாமதப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தகாரருக்கு மதிப்பிடு செய்யப்பட்ட ரூபா 208 மில்லியன் பெறுமதியான 06 நீச்சல் தடாகங்கள், ரூபா 91 மில்லியன் தொகையான உள்ளக விளையாட்டரங்கு மற்றும் ரூபா 54 மில்லியன் தொகையான ஓட்டப்பாதை என்பவற்றை நிர்மாணிப்பதற்கான நிர்மாண நடவடிக்கைகளுக்கு 38 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 08 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 254 | 186 | 68 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 43 | 09 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **324** | **240** | **86** | **02** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் அமைய பதவிகள் இரண்டிற்காக இரண்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.